பக்கங்கள் எட்டு

விலைரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
வரலாறும்
சமூகக்கல்வியும்
பகுதி I
பொது அறிவு

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (15-9-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 270

## ★ பொதுத் தேர்தல் நெருங்கும் வேளையில்

# அனுருத்த, முப்படை தளபதிகள் யாழ் விஜயம்

# மீண்டும்படை நகர்வுக்கு வழிவகுக்குமா?

### நவீன யுத்ததளபாடங்களும் கொண்வனவு

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில் இராணுவத்தினரால் மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளை விட மேலும் சில பகுதிகளைக் கைப்பற்றுவதை உறுதி செய்யும் வகையில் எரிபொருள் மின்சக்தி அமைச்சரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்த யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்,

ஜெனரல் அனுருத்தரத்வத்தையுடன் முப்படைத் தளபதிகளும் கூட்டுப் படைத் தளபதி றொகான் தளுவத்தையும் யாழ்ப்பாணம்வந்திருந் தனர்,

யாழ்குடாநாட்டில் விடுதலைப் புலிகள்வசமுள்ள பகுதிகள்ள மீளவும் மீட்டெடுப்பதற்கு யுத்தத்தை தீவிரப் படுத்திவரும் இவ்வேளையில். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் முப்படைத் தளபதிகள் கூட்டுப்படைத் தளபதிஆகியோரின்யாழ் விஜயம்முக்கியத்தும் பெறுவதுடன் அடுத்தகட்டப் படை நகர்வுக்கு படையினரை உற்சாகப்படுத்தும் வகையிலும் இவ்வருகை அமைந்திருக்கலாமென

[8ஆம் பக்கம் பார்க்க]

# தேர்தல் ஆணையாளரிடம்விளக்கம் கோர ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு

### சிறிசேன கூரே கூறுகிறார்

(கொழும்பு)

எச்சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஆணையாளரிடம் விளக்கம் கோரும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு என்று பிரஜைகள் முன்னணித் தலைவர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்குத் தெரியாமல் தேர்தல் ஸ்ரிக்கர்களை அடித்ததின் மூலம் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதை அடுத்தே பிரஜைகள் முன்னணித்தலைவர் சிறிசேனகூரே இவ்வாறு தெரிவித்துள்ளார்:

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

தேர்தல் ஆணையாளர் ஸ்ரிக்கரை அச்சடித்ததின் மூலம் பொதுமக்கள் மத்தியில் பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளார். அரசியல் கட்சிகள் இது பற்றி அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை.

தேர்தல் ஆணையாளரை ஜனாதிபதி நியமிப்பதால் அவரிடம் விளக்கம் கேட்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(வ)

## 17ந் திகதி விசேட பயணிகள்கப்பல் இன்றும் நாளையும் பயணச்சீட்டு பெறலாம்

(யாழ்ப்பாணம்).

பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையில் எதிர்வரும் 17ம் திகதி விசேட கப்பல் சேவை ஒன்றை நடத்த யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ★ களுத்துறை, வெலிக்கடை சிறையில்இருந்து

## 3இராணுவத்தினர் உட்பட 10 கைதிகள் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

களுத்துறை, வெலிக்கடை சிறைச்சாலைகளிலிருந்து மூன்று இராணுவத்தினர் உட்பட பத்துச் சிறைக் கைதிகள் யாழ் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மாற்றம் செய்யப்பட்டுள்ள பத்து சிறைக் கைதிகளும் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விவாதம் ஒன்றை நடத்த ரணில் விக்கிரமசிங்க வருவாரா?

### வரதராஜப்பெருமாள் கேள்வி

(கொழும்பு)

1989ஆம் 90ஆம் ஆண்டுகளில இலங்கையில் என்ன நடந்தது என்பதைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ள பகிரங்கவிவாதத்திற்குஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வருவாரா என முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் சவால்விடுத்துள்ளார்.

[8ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குச்சீட்டில் "ஸ்ரிக்கர்"

அரசாங்கத்துக்குத் தெரியாமல் தேர்தல் ஸ்ரிக்கர்களை அடித்ததின் மூலம் தேர்தல் ஆணையாளர் ஸ்ரிக்கரை அச்சடித்ததின் மூலம் பொதுமக்கள் மத்தி உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

தேசியக் கட்சித் தலைவர் [8ஆம் பக்கம் பார்க்க)

# அனுராதபுரம் கொண்டுசெல்லப்பட்ட 20கி.கிராம் வெடிமருந்து அகப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனை வீதியில் அமைந்துள்ள மடுதமுனை பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து 20கிலோ கிராம் நிறையுடைய வெடி மருந்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வெடி மருந்துப் பொருள் ஒட்டோ ஒன்றின் மூலம் அனுராதபுரத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட போதே கண்டு பிடிக்கப்பட்டதாகவும், இதன் போது நான்கு முஸ்லிம்களும் ஒரு தமிழரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ந)

## வாக்குச்சீட்டில் "ஸ்ரிக்கர்" தொடர்பாக அறிவுறுத்தல் இல்லை

### யாழ்.உதவி தேர்தல ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

வாக்குச் சீட்டுகளில் ஸ்ரிக்கர் ஒட்டுவது தொடர்பாக எதுவித அறிவுறுத்தலும் தமக்கு கிடைக்கவில்லை என்று யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் யாழ் மாவட்டத்தில் (8ஆம்பக்கம் பார்க்க)

## விடுதலையானவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் வைத்து கடந்த ?ந்திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் 96 வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கானபிரேரணை 96 அதிகப்படியான வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது கலைக்கப்பட்ட 10வது பாராளுமன்றத்தை ஜனாதி (8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளரை சி.ஐ.டி விரைவில் விசாரிக்கும்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஸ்ரிக்கர் விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரை புலன் விசாரணைக் குழு விசாரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னேற்பாடாக தேர்தல் ஆணையாளரை விசாரிப்பதற்கு அனுமதி கேட்டு சட்டமா அதிபரிடம் விண்ணப்பமொன்றை புலனாய்வு பிரிவினர் அனுப்பி வைத்துள்ளனர். (ந)

# இந்தியத் தூதுவர் கிருஷ்ணமேனன் புளொட் சித்தார்த்தனுடன் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மக்கள் எவ்விதம் நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதை அறிவதில் இந்தியா தீவிர அக்கறை காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கு தேர்தல் நிலவரம் தொடர்பாக புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனையும், ஈரோஸ் அமைப்பைச்சேர்ந்த சுதாமாஸ்ரரையும் இலங் (8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

அரியாலைப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி இராணுவத்துடனான மோதலின் போது தமது தரப்பில் உயிரிழந்தோர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்கள் விபரம் வரு (8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ் சிறு விளம்பரம்


### தேவை

இணுவிலில்இயங்கிக்கொண்டிருக்கும் ஆடை தைக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர், வெட்டுபவர், தைப்பவர், பிறாதைப்பவர், பூப்போடுபவர்கள் தேவை. இடம் பெயர்ந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சகல விபரங்களுடனும் 20-09-2000 முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 110, வலம்புரி இல-5வெள்ளாந்தெரு, யாழ்பாணம். [கி/786]


### ஒலிம்பிக்...

சாதாரணமாக இருந்த பொழுதிலும் ஒலிப்பிக் சரித்திரத்தில் அழியாத இடத்தை பிடித்துவிட்டது.

அதேபோல் பின்லாந்தின் நீண்டதூர ஓட்டவீரரான 'பவிவே நுகர்னி' அமெரிக்காவின் நீச்சல் வீரரான ஜொனி வைஸ் முல்லர்சோவியற் யூனியனின் ஜிம்நாஸ்ரிக் வீரங்கனை 'லறியாலத்தியானா' ஆபிரிக்கா - அமெரிக்கா குழுவினரை ஓட்ட வீரர் 'ஜெய்சி ஒவன்ஸ்' கீயுபாவின் மத்திய தூர ஓட்ட வீரர் 'அல்பிடேட் யோண்' தொரேனாபோன்றவீரர்கள் ஏற்படுத்திய சாதனைகளும் ஒலிம்பிக் போட்டிகளின் வரலாற்றின் முக்கிய இடத்தை பெற்றுள்ளன.

புராதன காலத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் தொடர்ந்து 11 நூற்றாண்டுகள் நடைபெற்றன. ஆனால் கி.பி. 4வது நூற்றாண்டிக் சக்கரவர்த்தி 'ப்ாலே'வியல்தியோ டோலியஸ்ஸி இன் ஆட்சியின் போது இந்த விளையாட்டுக்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

அதன் பின்புபியாரேகுபேர்டின்' என்ற பிரான்ஸ் தேசத்தவர் பல நாடுகளுக்கு பயணம் செய்து விளையாட்டு வல்லுநர்கள் பலரை சந்தித்து அவர்களின் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் பெற்ற பின் 1894ம் ஆண்டு பரிஸ்ஸில் ஒரு மகாநாட்டை கூட்டினார். அதில் கலந்து கொண்ட 34 நாடுகளின் பிரதிநிதிகள் ஒலிம்பிக் போட்டிகளை மீண்டும் நடத்துவது என்று ஏகமனதாக தீர்க்கமான முடிவை எடுத்தனர்.

அதன்பயனாக 1896ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நவீன ஒலிம்பிக்கின் முதலாவது விளையாட்டுப் போட்டிகள் 'எதன்சில்' நடைபெற்றது. ஆனால் இப்போட்டியில் பிரிட்டன், அவுஸ்திரேலியா, பல்கேரியா, டென்மார்க், சிலி, ஜேர்மனி, கிறீஸ் பிரான்ஸ், சுவிஸ்லாந்து, சுவீடன், கங்கேரி, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய 13 நாடுகள் மாத்திரமே பங்குபற்றின.

#### ஒலிம்பிக்கின் ஐக்கிய ஒற்றுமைப் பாடு

இன்று நவீன ஒலிப்பியாவில் புனித க்ரேஸ் மேட்டின் அடிவாரத்தில் அமைக்கப்பட்டுள்ள 'பாரோரன் பியர்ரேடி குபேடின்' நினைவுச் சின்னம் சகல விளையாட்டு வீரர்களினதும் மதிப்பிற்குரியதாக திகழ்கின்றது. இவர் இளம் வீரர்களின் உடல் ஆற்றல்களை அபிவிருத்தி செய்யும் ஒரு வழியாக மட்டும் இந்த போட்டிகளை கருதவில்லை. அதனால் தான் அவர் விளையாட்டு என்பதன் பொருள் சாந்தி' என்று ஒரு தடவை கூறினார். மேலும் அவர் அவ்விதம் எழுதியதற்கு காரணம் நவீன ஒலிம்பிக் வேறுபட்ட கண்டங்களின் மக்களை ஐக்கியப்படுத்தக் கூடிய சக்தி உடையது என்றும் அதனால் உலகளாவிய ரீதியில் மக்கள் மத்தியில்சாந்தியும் சமாதானமும் நிலவ வழி கோலும் என்று அசையாத நம்பிக்கை கொண்டு இருந்தார். என்று விளையாட்டு வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

நவீன ஒலிம்பிக்கின் இந்த மாபெரும ஸ்தாபகர் 1937ம் ஆண்டு இறைபதமடைந்தார் அன்னார் செய்த பணிக்காகவும் அவரது நினைவாகவும் அவரின் இதயம் ஒரு காலத்தில் இடப்பட்டு கிறிஸில் உள்ள ஒலிம்பியாவில்இன்றும் பேணப்பட்டு வருகின்றது.

உண்மையான விளையாட்டு வீரன் பரிசில் பெருமதியை அல்ல வெற்றியின் கௌரவத்தையே தனது சொந்த வெற்றியை அல்ல தனது நாட்டின் வெற்றியை பெறவே முயற்சி செய்கின்றான். விளையாட்டு மிகச் சிறந்த அமைதியான உயர்வு தாழ்வு அற்ற உலகை கட்டி எழுப்ப உதவும் சாதனம்இப் போட்டிகளின் பிரதானமானது வெற்றி அடைவது அல்ல. அதில் கலந்து கொள்வது தான்ஏனெனில்வாழ்க்கை என்பது வென்று எடுப்பது அல்ல போராடுவது தான் என்று மிகத்தெளிவாக நவீன ஒலிம்பிக்கின் 'கிற்டி பியரேரின் டிகுபேரின்' அன்றுகூறியவற்றை விளையாட்டு வீரர்கள் என்றும் மறந்து விட முடியாது.

## இராசி பலன்

15/ 09 / 2000
(ஆவணி30, வெள்ளி)
துதியை
பி இ. 1.48 வரை
உத்தரட்டாதி
பி.ப 2.09 வரை
இராகு காலம்
10.33–12.30
சுபநேரம்
6.03-7.33
சித்தாமிர்தம்

**மேடம்**
நித்திரைக்குறைவு, அலைச்சல், மனக்கிலேசம், காரிய தாமதம்.

**இடபம்**
பணவரவு, குடும்பசுகம், கீர்த்தி, காரிய சித்தி.

**மிதுனம்**
பிரயாணம், தொழில் அதிகாரம், முயற்சி பலிதம்.

**கடகம்**
தந்தைவழி உறவு, சஞ்சலம் தொழில் மந்தம்.

**சிங்கம்**
தேவையற்ற பிரச்சினை, வியாதி, பிரயாண பயம்.

**கன்னி**
பணவரவு, களஸ்திரசுகம் போசன சுகம்.

**துலாம்**
தொழில் முயற்சி விருத்தி, சந்தோசமான செய்தி, காரிய நன்மை.

**விருச்சிகம்**
குடும்பக்கவலை, சிறு வியாதி, காரியம் கைகூடும்

**தனுசு**
வாகன சுகம் தடுமாற்றம், முயற்சி தாமதம்.

**மகரம்**
இடமாற்றம், பொருள் வரவு, உடல்நலம்.

**கும்பம்**
வாக்குக்கலகம், காரியத் தாமதம், உடல் வியாதி.

**மீனம்**
உடல் நலம், சுப காரியம், இலட்சுமிகரம்.

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்


ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]

புரட்சிக் கலைஞர்
விஜயகாந்
நடித்த
"வல்லரசு"

காட்சிகள்: 10.30 -2.00
(ப.நே) [இ 688


## இன்று நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தற்காலிக அடிப்படையிலான தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு வலிகாம வலயக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளான எஸ். தெட்சணாமூர்த்திஇல. 68, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

க. லோசேந்திரன் நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு

ப. நந்தீஸ் நவாலிகிழக்கு, மானிப்பாய்

தெ. நிதர்சன் சிங்கம் ஒழுங்கை, உடுவில் சுன்னாகம்

ஆகியோரை உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வலிகாமம், வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார். (த)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில்

# கேள்வி அறிவித்தல்

யாழ். பேருந்து நிலையத்தில் இரு மாடிக் கட்டடம் அமைப்பதற்கு இகராட்டில் (ICTAD) எம்-8, பகுதியில் அல்லது அதற்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவங்கள், கட்டட அமைப்பு வரைபடங்கள் ஆகியவற்றிற்கும், மேலதிக விபரங்களுக்கும் சிவில் பொறியியல் பகுதி வ.பி. போ. சபை கோண்டாவிலில் தொடர்பு கொள்ளவும்.

மீளளிக்கப்படாத கட்டுப் பணமாக ரூபா 500/-ம், மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 5000/-ம், செலுத்தி 20-09-2000 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்திய கேள்விப் பத்திரங்கள் 29-09-2000ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை வ. பி. போ சபை கூறுவிலைச் சபை தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விகள் உடனடியாக திறக்கப்படும்.

V. S.சொக்கலிங்கம்
பொது முகாமையாளர்
வ. பி. போ சபை

வட பிராந்திய போக்குவரத்துச் சபை
பலாலி வீதி, கோண்டாவில். (இ/792

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு, பிரதேசசபைத் தவிசாளரினால் கீழ்க்குறிப்பிடப் பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்களை 22-09-2000ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்கள் அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் கோருகின்றேன். கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். யாழ்ப்பாணம் அவர்களுக்கும் அனுப்பி வைத்தல்வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 25-09-2000 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. கேள்விகள் 25-09-2000 முற்பகல் 11-30 மணிக்கு திறக்கப்படும்; அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகள் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | உடுநகர் ச. ச. நிலைய கட்டடம் அமைத்தல் | 1000 00 | 250 00 |
| 02. | கொற்றாவத்தை மத்திய ச. ச. நிலைய கட்டடம் புனரமைப்பு | 1000 00 | 250 00 |
| 03. | ஜனசக்தி ச. ச. நிலைய கட்டடம் புனரமைப்பு | 1000 00 | 250 00 |
| 04. | கொற்றாவத்தை கலைவாணி ச. ச. நிலைய கட்டடம் புனரமைப்பு | 1000 00 | 250 00 |
| 05. | ஜோதி ச. ச. நிலைய கட்டடம் புனரமைப்பு | 1000 00 | 250 00 |
| 06. | இராசகிராமம் ச. ச. நிலைய கட்டடம் புனரமைப்பு | 1000 00 | 250 00 |
| 07. | மண்டான் மாவலி ச. ச. நிலைய பாலர் பாடசாலை கட்டடம் அமைத்தல் | 1000 00 | 250 00 |
| 08. | உடுநகர் ச. ச. நிலையத்தில் குழாய்க்கிணறு அமைத்தல் | 200 00 | 100 00 |
| 09. | கிழவிதோட்டம் ச. ச. நிலையத்தில் குழாயக் கிணறு அமைத்தல் | 150 00 | 50 00 |
| 10. | வெல்லன் பொதுக்கிணறு புனரமைத்தல் | 150 00 | 50 00 |
| 11. | முதலைக்குழிமணலாவெளி வீதி | 250 00 | 150 00 |
| 12. | யார்க்கரு 2-ம் ஒழுங்கை | 200 00 | 100 00 |
| 13. | துன்னாலை தெற்கு தமிழ்க்கலவன் பாடசாலை வீதி | 200 00 | 100 00 |
| 14. | வல்வெட்டி இந்து பாடசாலைவீதி | 1000 00 | 250 00 |
| 15. | தெடுத்தனை வீதி | 1000 00 | 250 00 |
| 16. | வீரகத்தி விநாயகர் வீதி கான் அமைத்தல் | 200 00 | 100 00 |
| 17. | சண்டில்குளம் இறைத்து துப்பரவு செய்தல் | 150 00 | 50 00 |
| 18. | உச்சில்குளம் படிகட்டுதல் | 250 00 | 150 00 |

வ. நடராசா ஜே. பி.
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
கரவெட்டி.

09 - 09 - 2000

[இ/791]

# ஆலயம் சென்று திரும்பிய இரு இளைஞர் படையினரால் சுட்டுக் கொலை

## ஆரையம்பதியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் அண்மையில் விசேட அதிரடிப்படையினரால் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த இரு இளைஞர்களும் ஆலயத்திற்குச் சென்றுவிட்டு தள்ளிரவு வேளை வீடு திரும்பிக் கொண்டிருந்த போது பதுங்கியிருந்த படையினரால் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக்கொல்லப்பட்டவர்கள்,

கனகசபை கருணாகரன் (வயது 21), பூவாலுப்பிள்ளை சிறிகாந்தன் (வயது 23) ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்

(ந)

# எதிர்க்கட்சியின் அலுவலகங்கள்முன் ஆளுங் கட்சியின் சுவரொட்டிகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் காரியாலயத்தில் உள்ள கட்சியின் தேர்தல் சுவரொட்டிகளை அப்புறப் படுத்திவிட்டு, ஆளும்கட்சி வேட்பாளர்களின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாக மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் போட்டி கோபல்லாவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது. மாத்தளை பிரதான வீதியிலுள்ள முன்னால் ஐ. தே. கட்சி எம். பி. யும் மேவட்பாளருமான பி. ஜினதாஸாவின் காரியாலயத்தில் ஒட்டப்பட்டிருந்த அவரது சுவரொட்டிகளை அப்பறப்படுத்திவிட்டு ஆளும் கட்சி வேட்பாளர்களின் சுவரொட்டிப் படங்கள் ஒட்டப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

# வேட்பாளர்களின் பாதுகாப்பிற்கு ஒரு துப்பாக்கி வைத்திருக்க முடியும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தமது தற்பாதுகாப்பிற்காக ஒரு துப்பாக்கி மாத்திரம் வைத்திருக்கலாம் என்றும் அதற்கும் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு துப்பாக்கிக்கு மேல் வேட்பாளர்கள் வைத்திருந்தால் அவை களையப்பட வேண்டும் என்றும் பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சகல பொலிஸ்நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

(வ)

# சவூதிஅரேபிய தூதரகங்களில் இலங்கை பணிப்பெண்கள் தஞ்சம்

## 25 பேர் கொழும்பு வருகை

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த 80 பெண்களில் 25 பேர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்,

மீதி 55 பேர் அடுத்தவார இறுதியில் அழைத்துவரப்படுவார்கள் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இதேசமயம் குவைத், இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ள 186 பேரையும் அழைத்து வருவதற்கான விமான பயண ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலும் 400 பேர் அந்நாட்டு அரசின் அனுமதி கிடைத்ததும் அழைத்துவரப்படவிருப்பதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலிருந்து சவுதி அரேபியாவிற்கு செல்லும் வீட்டுப் பணிப்பெண்கள் பலர் கொடுமைப்படுத்தப்படுவதும் தூதராலயங்களில் தஞ்சமடைவதும் சிலகாலமாக தொடர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்களாகி விட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-உ)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

**மாதிரி வினாத்தாள் - 3** **பகுதி - I**

ஆக்கம்: இரா.கணேசானந்தன்
(யா.நெடுந்தீவு மகாவித்தியாலயம்.நெடுந்தீவு)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

தரப்பட்டுள்ள உலகப்படத்தினைப் பயன்படுத்தி 1 முதல் 5 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

1) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் ''அந்தீஸ்'' மலைத்தொடரைக் குறிக்கும் எழுத்து?
(1) B (2) D (3) C (4) E

2) கி.பி 2000 ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த கைத்தொழில் மய நாடுகள் குழு 8[G 8] உச்சி மகாநாடு இடம் பெற்ற நாட்டைக் குறிக்கும் எழுத்து யாது?
(1) R (2) S (3) F (4) G

3) ''A'' என்ற பிரதேசம் எவ் அகலாங்குகளுக்கிடையில் அமைந்துள்ளது?
(1) கடகக்கோட்டிற்கும் மத்திய கோட்டிற்கும் இடையில்
(2) மகரக்கோட்டிற்கும் அந்தாட்டிக் வட்டத்திற்கும் இடையில்
(3) கடகக்கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடையில்
(4) மத்திய கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடையில்

4) கிழக்கு-மேற்கு வர்த்தகத்தின் மத்திய நிலையமாக ''கொன்ஸ்தாந்திநோபிள்'' விளங்கியது, அதனைக் குறித்து நிற்கும் எழுத்து யாது?
(1) F (2) R (3) S (4) Y

5) கி.பி 2000 ஆம் ஆண்டு 118 பேரைப்பலி கொண்ட நிகழ்வு நோர்வே நாட்டிற்குவடக்கே 'பாரென்'' கடலில் நீர்மூழ்கிக்கப்பல் விபத்துக்குள்ளாகியது அவ் நீர்மூழ்கிக் கப்பலுக்கு உரிமையான நாட்டைக் குறிக்கும் எழுத்து?
(1) B (2) S (3) F (4) G

6) 'பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை'' என்பது எவ் புரட்சியின் விளைவாகப்பெறப்பட்ட உரிமை ஆகும்?
(1) கி.பி 1689 ஆங்கிலப்புரட்சி (2) கி.பி 1789 பிரான்சியப்புரட்சி
(3) கி.பி 1776 அமெரிக்க சுதந்திரப்போராட்டம் (4) கி.பி1917 இரசியப்புரட்சி

7) இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய அந்நியர் பற்றி மாணவன் ஒருவன் எழுதிய சில வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்களுக்குப் பொருத்தப்பாடான அந்நியர் யார்?
★ பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தினர்.
★ பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்டன.
★ யாப்புச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.
(1) ஒல்லாந்தர் (2) ஆங்கிலேயர் (3) போர்த்துக்கேயர் (4) பிரான்சியர்

8) பின்வரும் கூற்றுக்களில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஆள்வீத மொத்தத்தேசிய உற்பத்தி உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது.
(2) நகர்புறச்சனத்தொகையின் நூற்று வீதம் உயர்வாகும்.
(3) பௌதீக வாழ்க்கைப்பண்புச் சுட்டெண் உயர்மட்டத்தில் இருத்தல்.
(4) விலைத்தளம்பல் உள்ள விவசாயப்பொருட்கள் ஏற்றுமதி மூலம்.
குறைந்த அன்னியச் செலவாணியை ஈட்டிவரும் நாடுகளாக விளங்குதல்

(நாளைதொடரும்)




கண்மூடித்தனமாக ஆதரிக்கவும் மாட்டோம்
கண்மூடித்தனமாக எதிர்க்கவும் மாட்டோம்
முறையான அரசியல் தீர்வுக்காய் போராடுவோம்
உருப்படியான தீர்வு முயற்சிகளுக்கு
ஒத்துழைப்போம்.



X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம். ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி (புளொட் + ஈரோஸ்)

(1689)

# பொதுஅறிவுவினாக்கள்

## இல. 22 தொகுப்பு: யூட்

பின்வருவனவற்றை கண்டு பிடித்தவர்கள் யார்?

01) தந்தி முறை—
02) ரேயான்—
03) டீசல் எஞ்சின்—
04) ஒலி பெருக்கி—
05) கல்குலேற்றர்—
06) தற்போதய சீனத் தலைவர் யார்?
07) பிரெஞ்சு கம்யூனிட்டி எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்க பட்டது?
08) மெக்ஸிக்கோ நாட்டின் நாணய அலகு எது?
09) இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர் யார்?
10) 2000ஆண்டுஐ .நா உச்சி மகாநாடு எங்கு இடம் பெற்றது?
11) கியூபா நாட்டின் தற்போதய அதிபர் யார்?
12) உலகில் பெரிய சட்ட சபையை கொண்டுள்ள நாடு எது?
13) டோவா நீரிணை எந்த நாடுகளை பிரிக்கின்றது?
14) புதன் அதனுடைய அச்சில் ஒருமுறை சுழல்வதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?
15) பரப்பளவில் இரண்டாம் இடத்தில் நிற்கும் கோள் எது?
16) ரஷ்யாவும் அமெரிக்காவும்சேர்ந்து நடத்திய விண்வெளி ஆரட்சி எது?
17) பலூனை பயன்படுத்தி வான சாஸ்திர ஆராட்சிகள் ஆரம்பமானது எப்போது?
18) செயற்கை சாயம் தயாரிக்கும் தாதுப்பொருள் எது?
19) இலத்திரனை கண்டு பிடித்தவர் யார்?
20) அம்பிசிலினைக் கண்டு பிடித்தவர் யார்?
21) பர்மா எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் பெற்றது?
22) ஆசியாவின் முதல் பெண் ஜனாதிபதி யார்?
23) 1999 ல் நடை பெற்ற றக்பி உலககிண்ண போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?
24) கஸ்தூரி பெறப்படுவது எந்த விலங்கிலிருந்து?
25) பிரான்சிய புரட்சி எப்போது ஆரம்பமானது?
26) உலகில் விசாலமான விமான சேவை எது?
27) லூயி பஸ்ரர் எந்த நாட்டை சேர்ந்தவர்?
28) ஆபிரகாம் இலிங்கன் அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி ஆவார்?
29) இந்தியாவில் அதிகம் நிலக்கரி காணப்படும் மாநிலம் எது?
30) வெங்காயம் எவ்வகையான மலர் குடும்பத்தை சேர்ந்தது?
31) சாதாரண மனிதனின் உடல் வெப்பநிலை எவ்வளவு?
32) டெங்கு காய்சலை பரப்பும் நுளம்பு எது?
33) அணுகுண்டு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலகம் எது?
34) Golden key Card யாரால் வழங்கப்படுகிறது?
35) HiV வைரசை கண்டு பிடித்தவர் யார்?
36) இலங்கையின் தேசிய மலர் எது?
37) இலங்கையில் சோயா அவரை ஆராட்சி நிலையம் எங்குள்ளது?
38) ஆங்கில மொழிக்குரிய சிறப்பு பெயர் என்ன
39) ஆசியாவிலிருந்து வட அமெரிக்காவை பிரிக்கும் நீரிணை எது?
40) சைத்தானின் வசனங்கள் எனும் நூலை எழுதியவர் யார்?

## பொது அறிவு வினா இல. 21

அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயா விபரம் வருமாறு

01) கே.பிரியவதனா,நெல்லியடி.
02) வே.ஐங்கரன்,சுன்னாகம்.
03) ச.சுஜன்,நல்லூர்.
04) கி.சிவானந்தம்,திருநெல்வேலி;
05) வே.செந்தூரன்,மானிப்பாய்.
06) சி.சயந்தன்,வட்டுக்கோட்டை;
07) ச.ஹபிலன்,வட்டுக்கோட்டை;
08) இ.றஜிதா,கொக்குவில்.
09) இ.சிவசங்கர்,ஆவரங்கால்;
10) செ.றெரீம் நிரோஷன்,வட்டுக்கோட்டை;
11) உ.அனித்தா,உரும்பிராய்.
12) செ.யசிந்தா,ஊர்காவற்றுறை;

குறிப்பு:-

இதற்கான விடைகளை 21-09-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்

### அறிவியல் பகுதி வினா இல. 22

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை: ..............................
மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# பலாலி பயிற்சிக்கலாசாலையின்

# சான்றிதழ் பெறாதவர் கவனத்திற்கு

யசோதராதேவி நாகலிங்கம் அருந்தனி வாசம், அரசடி றோட் யாழ்
சாந்தநாயகி சிதம்பரப் பிள்ளை, வடலியதி,தும்பளை பருத்தித்துறை
கந்தசாமி சந்திரகாந்தன் 14/1, வைமன் றோட்,யாழ்ப்பாணம்
அம்பலவாணர்கசேணமூர்த்தி 10ம் வட்டாரம் புங்குடுதீவு
செல்லத்துரைஜெயவீரசிங்கம் அல்வாய் வடக்கு, அல்வாய்
சண்முகம் கருணானந்தன் மே/பா, திருமதி என். சின்னையா, துன்னாலைவடக்கு, கரவெட்டி
மாசிலாமணி இராஜஸ்கந்தன் அத்தியடி சந்தி பருத்தித்துறை
நாகலிங்கம் இராதாலிங்கம் வெயின் அளவெட்டி தெற்கு, அளவெட்டி
ஆறுமுகன் இரவீந்திரநாதன் அத்தியடி, பருத்தித்துறை
கணபதிப்பிள்ளை சபாநாயகம், யோகபவனம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி
செல்வராஜா சற்குருநாதன் பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை
வீரகத்தி செல்வராஜா சம்பத்தர் கடையடி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி
பாலு சண்முகநாதன் உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்
சூரிப்பிள்ளை தம்பிராஜா கோவில் சந்தி, துன்னாலை தெற்கு, துன்னாலை
சங்கரப்பிள்ளை தில்லையம்பலம், 'லக்சுமி வாசா', சங்கரத்தை, வட்டு
அச்சுதன் வடிவேல், 17, லக்ஸ்மன் பிளேஸ், கிருலப்பனை
டெலிசியா சந்திரகுமார்
பாலசிங்கம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
சுகுந்தலாதேவி கோபால பிள்ளை, பெதனிகிரான் கிப விமலஜோதி மதியாலசிங்கம் 'பக்தவாசா', கரவெட்டி கிழக்கு, கரவெட்டி
கருணாதேவி நவரட்ணம் உரும்பிராய்
சுப்பையா பாலேந்திரன் 'கலாவாசா', புதிய தெரு ஆனைக்கோட்டை
புஸ்பராணி பாலசுப்பிரமணியம், பருத்தித்துறை
புஸ்பராணி சிவபாலன் 18, செம்மணி றோட், நல்லூர்
மேரி ஞானறோஸ் ஞானப்பிரகாசம், இணுவில் மேற்கு, சுன்னாகம்
ஜோசப்பீட்டர் எம்மானுவல் நாரந்தனை தெற்கு, ஊர்காவற்துறை
செல்லத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா, 'ரத்தினா', ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி
வனஜா மரினா ஜோசப் 106, 4வது குறுக்குத்தெரு, யாழ்;
தவமணிதேவி கந்தையா 93/23, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம்
செல்வராணி மகேஸ்வரன் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்
கிறகரி அந்தோனிப்பிள்ளை காணிக்கந்தோர் கிளிநொச்சி
பெனடிக்ற் கஸ்ரன் பொனிபாஸ் 30, மாட்டின் றோட், யாழ்.
டொறோதி வினெற் டேவிட் பல்லேகம, அற்பாச்
புவனராணி ஜெயபாலேந்திரா வளர்மதி, கந்தசாமி கோவிலடி றோட், வவுனியா
விஜயேந்திரராணி கணபதிப் பிள்ளை எம்.சீ. 123, தர்மபுரம், பரந்தன்
பிரேமாவதி கனகலிங்கம் 47/1, அரியாலை, யாழ்.
விஜேலக்சுமி காராளசிங்கம் 49, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி
உறில்டாசுகிர்தமதி இரட்ணம் லவ் லேன், உடுவில்
இரஞ்சிதராணி இராஜரட்ணம் கிருஷ்ணவாசா, தெல்லிப்பளை
மயிலுப்போடி குமாரசாமி ஏறாவூர் டிவிசன் 5, செங்கலடி
இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை சிவன்பண்ணை றோட், கொட்டடி, யாழ்

### கல்வியாண்டு 1973-1979

சக்திதேவி தியாகராசா
மனோன்மணி சின்னத்தம்பி
விஜெபமின் அனெற் கலிஸ்ரா
பொன்ராசா மன்னார்
கிருஸ்ணதேவி சுப்பையா கரம்பொல் மேற்கு, ஊர்காவற்றுறை
அன்னப்பா அந்தோனிப் பிள்ளை பிரெட்றிக் இல.19, மாட்டியுடாம், யாழ்.
அப்பாத்துரை மகாதேவன் கந்தப்பா வளவு,வல்வெட்டி, வல்வெட்டித்துறை
பொன்னையா சிவசுப்பிரமணியம்
சண்முகவடிவு பஞ்சாட்சரம் 'குருவாசா' குருறோட், காங்கேசன்துறை
வர்ணகுலசூரிய சிறில் றீற்றா லோல்
மகாலக்சுமி நாகமணி திருநெல்வேலி, யாழ்; (த-39)

(நாளை தொடரும்)

## நாளை போட்டி பரீட்சை

[யாழ்ப்பாணம்]

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவோருக்கான போட்டிப் பரீட்சையும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா தேர்வு (உள்வாரி) பயிற்சி நெறிக்கு இபேட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகள் யாவும் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (த)

## இலவச விதை நெல் விநியோகம்

(சங்கானை)

வலி; மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட, வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற விவசாயிகளுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் விதை நெல்லினை இலவசமாக வழங்கியுள்ளதுடன் அவர்களுக்குத் தேவையான வாளிகளையும் வழங்கியுள்ளது. (செ-16)

## சிறுகதைத் தொகுதி வெளியீடு

[சுன்னாகம்]

கந்தரோடை யாழ், ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி ஆரபியின் 'கரைதேடும்அலைகள்' சிறுகதைத் தொகுதி வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கல்லூரி அதிபர் க. சிவாஜி தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு இக்கல்லூரி தமிழ் மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. (த)

## நீர்வேலியில் ஹெலி தாக்கு

[தொண்டைமானாறு]

செவ்வச்சந்நிதி ஆலய உற்சவத்தின் போதுதவறவிடப்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் சில தினங்களிற்கு முன் ஹெலிகொப்டர்ஒன்றுசரமாரியான தாக்குதல் மேற்கொண்டதில் இந்து ஆலயம் ஒன்றின் ஓடுகள் சேதமாகியதுடன் ஓலைக்குடிசை ஒன்றும் தீக்கிரையாகியது.

மாலை 5 மணியளவில் இடம் பெற்றஇத்தாக்குதலில் அப்பகுதி வாழ்மக்கள்பெரும் பதற்றம் அடைந்தனர் எனவும் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் மறைவிடங்களில் பதுங்கிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

பட்ட அடையாய அட்டைகள் மற்றும் பிரிகேட்பாஸ் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை தொண்டைமானாறு தெற்கு கிராம அலுவலர் வெ. பிறேமச்சந்திரனிடம் ஒப்படைக்கப்கப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்டவர்களின் அடையாய அட்டை பெயர் விபரம் வருமாறு.

வேடிவலு,சிவகுமார் உடுப்பிட்டி, மகேஸ்வரி தனபாலசிங்கம் குடத்தனை வடக்கு, பொ. நாகம்மா கரம் பொன் இவ் அடையாள அட்டைகளை இக்கிராமசேவகரிடம் பெற்றுக் கொள்ளலாம்எனத் தெரிவிக்கப்படுகிறது [த-115]

## பொது அறிவு வினா இல. 21 இற்கான விடைகள்

01) டெப்ல்
02) ஷோரா
03) பெடரல் அசெம்பிளி
04) சீஜிர்
05) பொது மக்கள் காங்கிரஸ்
06) பிரேசில்
07) மலேசியா
08) ஆன்டருலாயிட் வெப்பர்
09) இத்தாலியில்
10) -ஷாகெகியோ கிசுமி ஜப்பான் 7-98 வயது வரை
11) ஜேர்மனி
12) முதலை
13) ஓமான் எயார்
14) லாரா டுட்டா, இந்தியா
15) மெக்சிக்கோ
16) அமெரிக்கா
17) சீனா
18) மனித உரிமை தினம்
19) லூனா 1
20) 1961
21) 1871
22) நுணுவில
23) 1901
24) எஸ்புனோரர்-1
25) 1990
26) லூயி பாஸ்ரர்
27) பெஞ்சமின் பிராங்கிலின்
28) நோர்வே
29) ஜேஹேக் நகரில்
30) சிலிக்கன்
31) ஆபிரிக்கா
32) கினியா கடற்கரை
33) கெக்கோ என்னும் பல்லியினம்
34) சால்ஸ் டாவின்
35) றொபட்கண்டெல் (கனடா)
36) ஜேம்ஸ் வூல்ஸ் பேக்கர்
37) பாகிஸ்தான்
38) 1903
39) 1978
40) சோவியத் யூனியன்

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# இன்று ஒரு தகவல்

## மாணவர்களின் கல்வி சிறக்க மனம் ஒன்றுபடவேண்டும்

மிதிலையை ஆண்ட ஜனகர் ஒரு பழுத்தஞானி. ஒருசமயம் சுகப்பிரும்மம் அவருவருடைய நாட்டில் ஒரு காட்டில் வந்து தங்கி இருந்தார். இதைத் தெரிந்துகொண்ட ஜனகர் அவருடைய சீடராக இருந்துகற்றுக்கொள்ள விரும்பினார்.

''என்னால் அரண்மனைக்கு வரமுடியாது அவசியம் சுக போகங்களையும் நான் ஏற்கமுடியாது. உமக்கு தோன்றினால் நீர் காட்டுக்கு வந்து என்னிடம் கற்கலாம். சொல்லித்தர ஆட்சேபனை இல்லை!'' என்றுகூறி விட்டார் சுகர். ஜனகர் சிறிதும் தயங்கவில்லை. தமது ஆடை ஆபரணங்களை கழற்றாமல் தினமும் வந்துகாட்டில் முனிவரின் குடிலில் அமர்ந்து பாடங்களைக்கற்றுக் கொள்ளத் தொடங்கினார். சுகரின் மற்ற சீடர்கள் தமது ஆசிரியரின் வைராக்கியத்தைப் பார்த்துப் பெருமை அடைந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. இவ்வளவு பேரும் எளிமையாக உடை அணியும் போது ஜனகர் மட்டும் ஆடை ஆபரணங்களை கழற்றி மாற்றிக் கொள்ளாமல் வந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நாள் வழக்கம்போல் எல்லோரும் பாடம் கற்றுக் கொள்ள வந்து கூடியபோது ஜனகர் வந்து சேரவில்லை. சுகரும் பாடத்தை ஆரம்பிக்கவில்லை: அதை மற்ற சீடர்கள் கவனித்தார்கள். ஓ! ஜனகர் ஒரு அரசர் என்பதால் அவருக்கு தனி மரியாதை கொடுக்கிறார் குருநாதர். நாமெல்லாம் காஷயம் அணிந்து வரும்போது ஜனகர்மட்டும் ராஜஉடை தரித்து வர அனுமதி அளித்திருக்கிறார். ஆக, நம்முடைய குருநாதரும் மற்றவர்களைப் போல்தான், பணத்திற்கும் பதவிக்கும் தான் அவர் மதிப்புக் கொடுக்கிறார்? என்று எண்ணிக் கொண்டார்கள்.

அன்றையிலிருந்து அந்தச் சீடர்களுக்கு குருநாதரிடம் மதிப்பும் மரியாதையும் குறைந்தது. அவர் பாடம் சொல்லும்போது கேட்பதிலும் கவனக்குறை ஏற்பட்டது. இதை சுகர் கவனித்து விட்டார்; ஆயினும் அதை வெளியே காட்டிக்கொள்ள விரும்பவில்லை. சீடர்களுடைய மனப்பக்குவத்திற்கு ஒரு சோதனை வைக்கத் தீர்மானித்தார்.

அன்று வழக்கம்போல் எல்லோரும் பாடம் கற்றுக் கொள்ள வந்து அமர்ந்திருந்தார்கள். ஜனகரும் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர்கள் அமர்ந்திருந்த இடத்தைச் சுற்றி மரங்கள் பற்றி எரியத் தொடங்கின. பாடம் சொல்வதை ஒரு கணம் நிறுத்தி விட்டு ''மிதிலை நாட்டின் அரண்மனையில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாகப் பல இடங்களிலும் நெருப்புப் பரவ ஆரம்பித்திருக்கிறது!'' என்று கூறிவிட்டுப் பாடம் சொல்வதைத் தொடர்ந்தார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் சீடர்களிற்குப் பயம் பிடித்து விட்டது. ஒருவனுக்குத் தனது வீட்டைப் பற்றிய கவலை ஏற்பட்டது. இன்னொருவனுக்குச் சாப்பாட்டுக்காக தானியங்களைச் சேகரித்துவைத்திருந்த களஞ்சியம் பற்றிய கவலை உண்டாயிற்று. வேறொருவன் தனது உடமைகளையும் செல்வத்தையும் பற்றி நினைத்துக் கொண்டான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கவலையுடன் அங்கிருந்து மெல்ல நழுவி ஓடி விட்டனர். மரத்தடியில் சுகரும் ஜனகரும் மட்டுமே இருந்தனர். பாடம் தொடர்ந்தது. சுகர் அமைதியாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஜனகர் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

சீடர்கள் ஓடிப்போய் பல இடங்களிலும் தேடிப் பார்த்து விட்டு திரும்பினார்கள். எங்கேயும் நெருப்புப் பற்றி எரியவில்லை. எந்த உடமையும் தீக்குஇரையாகவில்லை. அவர்களுக்குஎதுவுமேபுரியவில்லை: திரும்பி வந்தவர்கள். ஜனகர் அமைதியாகப் பாடம் கேட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தார்கள். எல்லாம் குருநாதர் தங்களைப் பரீட்சை செய்ய சோதனையே என்று புரிந்து கொண்டார்கள்.

சுகர் கூறினார்; 'ஜனகர் ஒரு அரசர். அவர் அந்தப் பதவியை துறக்கவில்லை ஆயினும் அவர் சாஸ்திரம் கற்க வந்தசீடர். அந்த நினைவையும் அவர் மறக்கவில்லை, ஆகையால் இங்கு வரும் வரை அரசரைப் போலவே வந்தார். அந்த உடையிலேயே இருந்தார். ஆனால் இங்கே வந்து அமர்ந்து கொண்டதும் அவருக்கு அரண்மனை நினைவு முழுவதும் அறவே போய் விட்டது. ஒருசீடராகமட்டுமே இங்கு அமர்ந்து பாடம் கேட்டார்.

உங்களைச் சோதிக்கவே நான் மிதிலையில் தீப்பிடித்திருப்பதாக கூறினேன். இங்கே காகைத்தில் தீப்பற்றி எரிவது போன்ற மாயையையும் உண்டாக்கினேன். அதைப் பார்த்ததும் நீங்கள் அவ்வளவு பேரும் தத்தம் உடைமைகளைப் பற்றியே எண்ணிக் கொண்டு ஓடினீர்கள். பாடத்தை பற்றிய நினைவு உங்களுடைய மனதை விட்டுப் போய்விட்டது.

ஆனால் ஜனகர் சிறிதும் கலங்கவில்லை அரண்மனையே பற்றி எரித்தாலும் அவர் கவலைப்படவில்லை. பாடத்தை தவிர வேறு எதிலும் அவருடைய கவனம் திரும்பவில்லை. அதைக் கவனித்தீர்களா? ஜனகரிடம் நான் பாரபட்சம் காட்டியதாகநினைத்தீர்களே? உண்மையான சிரத்தை மிகுந்த மாணாக்கர் யார் என்பதைப் புரிந்து கொண்டீர்களா?

எல்லோருக்கும் புரிந்தது எல்லாம் புரிந்தது. அவர்கள் எல்லோரும் வெட்கித் தலை குனிந்தனர்.

நன்றி: புனிதம் அருளும் புட்டபர்த்தி

# இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பகுதிகளை மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## யாழ்ப்பாணத்தில ரத்வத்த தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பகுதிகளை மீட்டெடுக்க உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த வகையில், கடந்த 3 மாதங்களில் 31 மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

அண்மையில்முப்படைத்தளபதிகள் சகிதம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், 51வது படைப் பிரிவு வீரர்களுடன் கலந்துரையாடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்ததாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டின் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளை மீட்டெடுக்கும் வகையில் அதற்கான மேலதிக ஆயுத தளபாடங்கள் விரைவில் வந்து சேரும் எனவும் படையினர் மத்தியில் உரையாற்றுகையில் மேலும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த திருநெல்வேலிப் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை சில தினங்களுக்கு முன் மேற்கொண்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத சில செய்திகள் தெரிவித்துள்ளன.

இவரது வருகையை ஒட்டி அப்பகுதியில் பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-உ)

## அறிமுக விழா

[மந்துவில்]

கோப்பாய் ஆசிரிய கலாசாலை புதுமுக ஆசிரிய, மாணவர்களுக்கான அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஆசிரியமாணவன் வை. விஜயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி ஆசியுரை நிகழ்த்துவார்.

(த-39)

## மலர் வெளியீடு

[நல்லூர்]

''நல்லூர் பிரதேச மலர்'' ஒன்றை நல்லூர் பிரதேச சபையினர் விரைவில் வெளியிடவுள்ளனர். யாவரும்பயன் பெறத்தக்க வகையில் இம் மலர் வெளிவரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-103)

## விவசாயிகள் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மகாவலி ''சி'' வலயப் பிரதேசத்தில்இனந் தெரியாதோர்மேற்கொண்டதுப்பாக்கிப்பிரயோகத்தில் இரண்டு விவசாயிகள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

(ந)

## விபத்தில் மாணவன் காயம்

(சுண்டுக்குளி)

உடுவில் சந்திப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற 'லான்மாஸ்ரர்' துவிச்சக்கரவண்டிவிபத்தில்பாக்கியராசா ஜெரிஸ் என்ற மாணவன் காலில் காயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் 'லான்மாஸ்ரர்' சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றார். [ந]

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு கலைமகள் சனசமூக நிலைய பாலர்பாடசாலை திறப்பு விழா நேற்று பி.ப 4 மணிக்கு இடம்பெற்றது.

விழாவின் பிரதம விருந்தினராகவலிகாமம்மேற்குபிரதேச சபைத் தலைவரும், வட்டுக்கோட்டை தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளருமான என் திரிலோகநாதன் கலந்து கொண்டு பாலர் பாடசாலையைதிறந்து வைத்தார்.

(வ)

## இறைவனைத் தரிசிக்க சென்றவர் பணம், நகைகளைப் பறி கொடுத்தார்

### சந்நிதியில் சம்பவம்

[தொண்டைமானாறு]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய தீர்த்தோற்சவத்திற்கு கலந்து கொள்ளச் சென்ற பக்தர் ஒருவர் பணத்தையும் தங்க நகையையும் இழந்துள்ளார்.

டச்சு றோட் சுழிபுரம் மூளாயைச் சேர்ந்த சிதம்பர நடராஜர் சிவனேஸ்வரி என்பவரே இவ்வாறு 48 ஆயிரம் ரூபா பணத்தையும், இரண்டு தங்கச் சங்கிலிகளையும் தனது கைப்பையுடன் தவறவிட்டுள்ளார்.

இக்கைப்பையினுள் இருந்த இவரது அடையாள அட்டைகள் மாத்திரம் ஆலயத்தில் அமைந்திருந்த விசேட கருமபீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொலைக்கப்பட்ட பணம் வீடு திருத்துவதற்கென கடனாகப் பெற்ற பணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-115)

## தோல் இருக்க சுளை பிடுங்கும் திருட்டுக் கும்பல்களின் திருகுதாளம்

(மந்துவில்)

திருட்டுத்தனம் புரியும் கும்பல்களின் அட்டகாசம்பெருகி விட்ட இவ் வேளையில், அவர்கள் களவு எடுப்பதில் கைக்கொண்டு வரும் வழிமுறைகளில் இதுவும் ஒரு புது வகை.

பண்டத்தரிப்பு பகுதியில் இடம்பெயர்ந்து சென்ற ஒருவரின் வீடொன்றுக்குச் சென்ற சிலர், அவ்வீட்டு உரிமையாளரால் வீடு விற்பனை செய்யப்படவிருப்பதாகவும், அதனைத் தாம் வாங்கப் போவதாகவும் கூறினர்.

அத்துடன், வீட்டினை பார்வையிடப் போவதாக கூறியதற்கிணங்க பார்வையிடுவதற்கு அயலவரால் அனுமதிக்கப்பட்டது.

அடுத்தநாட் காலை, அயலவர்கள் அவ் வீட்டைச் சென்று பார்த்த போது வீட்டின் கதவு, யன்னல் ஒன்றும் காணப்படவில்லையாம்.

(உ-39)

## பொ. ஐ. ஐ.மு.தேர்தல் பிரச்சாரத்தில் ஊர்காவல் படையினர்

### ஐ. தே. க. குற்றச்சாட்டு

(வவுனியா)

வவுனியாவில் பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள், ஊர்காவல் படையினரை பயன்படுத்தி தமது தேர்தல் பிரச்சார வேளைகளை மேற்கொண்டு வருகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சாந்தகுமார முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற பாதுகாப்பு படையினருடனான சந்திப்பின் போது இந்த தகவலை சாந்தகுமார படை அதிகாரிகளுடைய கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் வவுனியாவில் ஊர்காவல் படையினரை பயன்படுத்தி தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவதிலும் மற்றும் பிரச்சார வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

(வ)


# சுயேச்சைக்குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

ஆலும் வேலும் பல்லுக்குறுதி - எங்கள் சின்னம்

தொலைபேசியே சொல்லுக்குறுதி.



(கி-788)

## செய்திப்பரல்

★ மியான்மார் எதிர்க் கட்சித் தலைவியை பிரித்தானிய தூதுவர் சந்திப்பதற்கு இராணுவ ஆட்சியாளர் அனுமதி மறுத்துள்ளனர்;

★ காஷ்மீர்தொடர்பான இந்தியப் பேச்சு வார்த்தையில் பாகிஸ்தானையும் சேர்த்துக்கொள்வது நல்லதென்று சீனா கூறியுள்ளது.

★ வெளிநாட்டு ஆதிக்ககாரர்களுடன் உள்நாட்டுத் துரோகிகளும் சேர்ந்து மியன்மார் அரசைக்கவிழ்க்க முயல்கிறார்களென்று அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

★ தமிழ் மாநில காங்கிரஸ் இம்மாதம் 27-ம்திகதி மாநிலம் தழுவிய மறியல் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்த உள்ளது.

# மத்தியகிழக்குநாடுகளின்எண்ணெய்விலைஏற்றம்

# அவலநிலையில் ஐரோப்பிய நாடுகள்

(லண்டன்)

மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் விலை தொடர்பான முடிவு, ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் இயல்பு வாழ்வு பாதிக்கப்படும் அளவிற்கு அங்கு பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது!

அரசியல், பொருளாதார, விஞ்ஞான வளர்ச்சியின் உச்சியில் நிற்கும் மேற்குலக நாடுகள், எதனையும் எதிர்கொள்ளும் அளவு திறமை வாய்க்கப்பெற்ற போதிலும் மத்திய கிழக்கு நாடுகளின் முடிவு அங்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது;

எண்ணெய் விலை அதிகரிப்பினால் லண்டன், பெல்ஜியம், ஜேர்மன், நெதர்லாந்து அடங்கலாக ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பெரும் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு ஊர்வலங்களும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரியவந்துள்ளது;

எண்ணெய் விலை தொடர்பான சாதக நிலைமை ஏற்படுத்தும் வகையில் லண்டன் நாடாளுமன்றத்தில் பேச்சு வார்த்தை நடைபெற்ற வேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு அத்துமீறிப்புகுமளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இதனை அடுத்து நாடாளுமன்றத்தைச் சூழவுள்ள பகுதி பலத்த பாதுகாப்பு பிரதேசமாக அமுல்ப்படுத்தப்பட்ட பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

## உலக தரிசனம்

ஜேர்மன் நகரப் பகுதியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், மற்றும் டிப்போக்கள் முன் மறியல் போராட்டம் இடம் பெற்று வருகிறது.

இதனால் உள்ளூர் போக்குவரத்துகள் ஸ்தம்பித நிலையையடைந்துள்ளதுடன், உணவுப்பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்செல்வதில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாக தெரியவருறது.

நெதர்லாந்தின் வீதிகளுக்குக்குறுக்கே வாகனங்கள் நிறுத்தி, வாகன உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதால், பெருந் தெருக்களில் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் கால் நடையாய் திரிவோர் தவிரவேறு யாரும் காணப்படவில்லை.

இதே சமயம், வேறு சில நாடுகளில் எண்ணெய் தீர்ந்து போயுள்ள நிரப்பு நிலையங்களுகு, ஆர்ப்பாட்டக்காரர்களின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி பொலிஸ் பாதுகாப்புடன் எண்ணெய் நிரப்பும் வேலைகளில் அரசுகள் ஈடுபட்டிருப்பதாகவும் அறியமுடிஇறது.

இந்நிலை கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படாவிடத்து, ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலை உலக நாடுகள் முழுவதிலுமே பிரதிபலிக்கும் அபாயநிலை ஏற்படலாம் என அரசியல் நோக்கர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

(உ)

## விளையாட்டுக் களம்

### ஒலிம்பிக் கால்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(சிட்னி)

ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்கத்திற்கு முன்பாகவே நேற்றுமுன் தினம் ஆடவர் மற்றும் மகளிர் கால்பந்தாட்டப்போட்டிகள் நடைபெற்றன;

அப்போட்டி முடிவுகளின் விபரம் பின்வருமாறு,

கான்பராவில் நடைபெற்ற மகளிர் ஆட்டத்தில் ஐரோப்பிய சம்பியனான ஜேர்மனி 3-0 எனும் கோல் கணக்கில் அவுஸ்ரேலியாவை வென்றது.

மெல்போர்னில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில்பிறேசில் 2-0எனும் கோல் கணக்கில் சுவீடனை வென்றது;

மெல்போர்னில் நடைபெற்ற ஆடவர் ஏ பிரிவு ஆட்டத்தில் 1-0 எனும் கோல் கணக்கில் அவுஸ்திரேலியாவை வென்றது.

அடிலோயிட்டில் நடைபெற்ற ஜோர்தான், நைஜீரியா அணிகளுக்கான ஆட்டம் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தது.

அமெரிக்காவிற்கும் செக் குடியரசிற்கும் இடையில் நடைபெற்ற ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி நிறைவுபெற்றது;

பிறிஸ்பேனில் நடைபெற்ற ஆட்டத்தில் 3-2 எனும் கோல்கணக்கில் கமரூனை குவைத் வென்றது.

(த)

★ இந்தியச் சிறையிலுள்ள

# 130 இலங்கை மீனவரை விடுவிக்க லக்ஷ்மன் இந்தியா செல்வார்!

(சென்னை)

இந்தியாவில்பல்வேறுசிறைச்சாலைகளில் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் 130 இலங்கை மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சு வார்த்தை ஒன்றை மேற்கொள்ள அமைச்சர்லக்ஷ்மன் ஜெயக்கொடி இந்தியா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சிறப்புத் தூதுவராக இந்தியா செல்லவுள்ள அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி 130 இலங்கை மீனவர்களையும் விடுவிப்பது தொடர்பான பேச்சுக்களை இந்திய அதிகாரிகளுடன் நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## அமெரிக்க கடற்பரப்பில் மீன் பிடிக்க ஜப்பானியருக்கு தடை விதிப்பு

(வாஷிங்டன்)

தனது நீர் பகுதியில் மீன் பிடிப்பதற்கு அமெரிக்கா ஜப்பானுக்கு தடை விதித்துள்ளது.

ஜப்பான் அடிக்கடி அமெரிக்க நீர்ப்பகுதிகளில் திமிங்கிலங்களை வேட்டையாடுவதை எச்சரித்துடன், அப்படித்தொடருமாயின்மீன்பிடிப்பதற்கு ஏற்கனவே வழங்கிய அனுமதியை ரத்து செய்யப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது;

அதே வேளை திமிங்கில வேட்டை தொடருமாயின் ஜப்பான் மீது பொருளாதாரத்தடை விதிக்கப் போவதாக அமெக்கா எச்சரித்துள்ளது. [து]

## சுப்றீம் கோட்டின் தீர்ப்பைப் பொறுத்தே நடிகர் ராஜ்குமாரின் விடுதலை'

### நக்கீரன் ஆசிரியர் தெரிவிப்பு

சுப்பிறீம் கோட்டின் தீர்ப்பைப் பொறுத்தே நடிகர் ராஜ்குமாரின் விடுதலை என்று வீரப்பன் கூறியதாக நக்கீரன் ஆசிரியர் கோபால் தெரிவித்தார்.

அவர் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவிக்கையில்; நான் இரு அரசுகளின் சம்மதத்தின் பேரில் காட்டுக்கு வீரப்பனைச் சந்திக்கச் சென்றேன்.

போகும் பொழுதுகர்நாடக அரசு 121 தடாக கைதிகளை விடுவிக்கத் தயார் என்றும் சுப்பிறீம் கோட்டின் தீர்ப்பு வந்ததும் அறிவிப்பதாகவும் சொல்லியிருந்தார்கள். தமிழ் நாட்டரசும் 5 தீவிரவாதிகளையும் விடுவிப்பதாகவும் உறுதிதந்திருந்தது:

நான் வீரப்பனுடன் காட்டில் தங்கியிருந்த பொழுது செய்தி வரும்வரும் என எதிர்பார்த்தேன். கர்நாடக அரசிடமிருந்து தடாக் கைதிகளை விடுவிக்க முடியாதென்று சுப்பிறீம் கோட் தீர்ப்புக் கூறியதாக செய்தி வந்தது;

இதனையடுத்து நான் காட்டில் வீரப்பனுடன் பேச்சை முறித்துக் கொண்டு வரவில்லை, முடித்துக்கொண்டு திரும்ப நேரிட்டது.

அப்பொழுது வீரப்பன்; ஒரு கையில் கர்நாடக தடாக் கைதிகளின் தமிழ் நாட்டுத் தீவிரவாதிகளின் விடுதலைப் பத்திரம் தந்தால் மறுகையில் நடிகர் ராஜ்குமாரின் விடுதலைப் பத்திரம் இடைக்கும் என்று சொன்னதாக நக்கீரன் ஆசிரியர்கோபால்தெரிவித்தா

மேற்கு வங்கத்தில்

## ஆளும் இடதுசாரி முன்னணியை பதவி கவிழ்க்க கடும் முயற்சி

### செல்வி ஜெயலலிதா குற்றச்சாட்டு

(புதுடில்லி)

மேற்கு வங்கத்தில், ஆளும் இடதுசாரி முன்னணி அரசை பதவி கவிழ்த்து. திருநாமுல் காங்கிரஸ் கட்சியை திருப்திப்படுத்த பாரதீய ஜனதாக் கட்சி முயன்று வருவதாக அ. இ. அ. தி. மு. க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் திறமையாக ஆட்சிபுரியும் ஜோதிபாசு தலைமையிலான ஆளும் இடதுசாரி முன்னணியை நீக்கிவிட்டு திருநாமுல் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவை பெறுவதன் மூலம் தமது நிலையை அங்கு ஸ்திரப்படுத்த பாரதீய ஜனதாக்கட்சி முயல்வதாக ஜெயலலிதா மேலும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதேசமயம்,

தெலுங்குதேசம் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் மேற்கு வங்கத்தின் உண்மை நிலை அறியும் வகையில் அங்கு சென்ற குழு, சில மாவட்டங்களில் மட்டும் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாகவும் அவற்றை அமைதியற்ற பகுதியாக பிரகடனப்படுத்தும் படியும் ஆலோசனை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது; (உ)

# இந்தோவில் கார்க்குண்டு வெடிப்பு 15 பேர் பலி; பெருமளவில் காயம்

(ஜஹார்த்தா)

இந்தோனேஸியத் தலைநகரில் குண்டு ஒன்று வெடித்ததில் 15பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்;

### தலைநகரில் புகைமூட்டம்

தலைநகர் ஜஹார்த்தாவில் சன நெரிசல் நிறைந்துள்ள பகுதியில் பங்குச்சந்தைக் கட்டடத்துக்கருகே காரில்வைக்கப்பட்டகுண்டுஒன்றுவெடித்ததில் 15பேர் கொல்லப்பட்டனர்;

இதனால் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 16இற்கு மேற்பட்ட கார்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன என்றும் கட்டடங்களுககும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

மீட்புப்பணிகள் தொடர முடியாதவாறு தலைநகரைப் புகைமூட்டம் கவ்விக் கொண்டிருப்பதாகவும்இதனால்சேத விபரங்கள் குறித்துதிட்டவட்டமான தகவல்களை பெற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

இந்தக்குண்டு வெடிப்பு அரசுக்கெதிரான சதிவேலையாக இருககலாமென்றும் நகரின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# பாகிஸ்தான் பங்களாதேஷிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்

### பிரதமர் ஷேக் ஹஸீனா

(டாக்கா)

பாகிஸ்தான் முன்பு பங்களாதேஷிற்குச் செய்த கொடுமைகளுக்காக, அந்நாடு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா கேட்டுள்ளார்;

கடந்த கால நிகழ்வுகளை மறந்து விடவேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் பங்களாதேஷிடம் கேட்டுக் கொண்டதற்கே பங்களாதேஷ் பிரதமர் மேற்கண்டவாறு அமெரிக்காவில் வைத்துக் கூறியுள்ளார்.

இதே வேளை பாகிஸ்தானில் இராணுவ ஆட்சிஅமைக்கப்பட்டதை ஷேக் ஹஸீனா வன்மையாக கண்டித்திருந்தார்;

இந்தப் பேச்சுகளின் விளைவாகவே, ஐ. நா. சபையின் புத்தாயிரமாண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் பங்களாதேஷ் பிரதமரைச் சந்திக்கவில்லையென்று செய்தியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்; (து)

### கற்பித்தல் பயிற்சி

(அரியாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிஆசிரியமாணவர்கள் எதிர் வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல், இருவாரங்கள் பாடசாலைகளுக்குச் சென்று கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர். (உ-106)

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன் சாராப் பண்பில் சொல் பல்லாரகத்து

- குறள் -

# வலம்புரி

## சுவர் இலக்கியங்கள்

சுவர் இலக்கியங்கள் சுருதி பாடத்தொடங்கி விட்டன. இல்லாத ஒற்றுமை சொல்லிலே சுவரிலே. நேர்மையும் நீதியும் பேதலித்துப்பேப்பரில் அச்சிட்டுக்கிடக்கு. தானங்களிற் சிறந்த நிதானம் அதுவும் கிடக்குது. இன்னோரன்ன அரும்பதங்கள் அச்சேறிச் சுவரில் தெரியுது. சும்மா சொல்லக் கூடாது வாசிக்கச் சுவையாய் இருக்குது. கறிக்கு உப்புப்போட்ட மாதிரி வாழ்க்கையில் நிதர்சனமாக வேண்டுமே.

அதுதான் போகட்டும் சேவை செய்பவர் முகங்களில் கரியைப்பூசும் அநியாயம் தொடருது. மக்கள் முகங்களில், சுதந்திரப் பாதையில், விடுதலை வேட்கையில் பூசப்படும் கரியா அது என்று தெரியாது மக்கள் விளிக்கிறார்கள்.

போர் விமானங்கள் யாழ் நகர் மீது பறக்கக் கூடாது காரணம் வைத்தியசாலை நோயாளர்களைப் பாதிக்குமாம். இதற்கு மறுப்புக் குரல்கள் விடப்பட்டுள்ளன. இவை பறக்காமல் இருக்கஎல்லா இடங்களிலும் நோயாளிகள் இருந்தால் போச்சு. வேடிக்கையாகத் தான் இருக்கு. விமானங்கள் தாழப் பறக்கக் கூடாது. இது வேண்டுகோள்?. உயரப்பறக்கலாம் என்பதா அர்த்தம்?. அநியாயமான யுத்தத்தைஅறவேநிறுத்த உறுதி பூணக்கூடாதா? எல்லாக் கட்சிகளும்ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கக் கூடாதா? ஜனநாயகம் மருந்துக்கும் இல்லாமண்ணிலே ஜனநாயகம் பேசுவதும் வேடிக்கை தான் தமிழரின் தலைவிதியை நினைத்தால் அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. என்ன தான் நடந்தாலும் தேர்தலை நடத்தி முடித்தால் ஆறு வருடம் ஆறியிருக்கலாம் தானே?.

இங்கு தான் அற்ப சொற்ப சலுகைகளைக் காட்டி காலம் கடத்தும் வேடிக்கையை உணர முடிகிறது. நீரின் அடித்தளத்திலே அமிழ்ந்திறக்கும்மீன் குஞ்சுக்கூட்டங்கள் போல் தமிழன் விழி பிதுங்குகிறான். வழி அறியாது விரக்தியின் விளிம்பிற்கே சென்று கொண்டிருக்கிறான்.

ஓடக் கூடியவன் மண்ணை விட்டு ஓடுகிறான். வாய்ப்பு வசதியற்றவன் சுடுகாட்டில் நடராஜ தாண்டவம் ஆடுகிறான். அதுவும் வாழ்வியல் முடிவின் அறிகுறியோ?.

அன்புடன் ஆசிரியர்

# ஒலிம்பிக் - ஐக்கிய ஒருமைப் பாட்டிற்கும் வீரசாதனைகளிற்கும் களம் அமைக்கும்

**கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம்**

அவுஸ்ரேலியாவில் சிட்னி என்ற நகரில் இன்று தொடக்கப்பட்ட 27வது கோடைகால ஒலிம்பிக்போட்டியில் உலகின் அனைத்து மூலை முடுக்குகளில் இருந்தும் 20,000ற்கு மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்குபற்ற உள்ளார்கள்.

இப்போட்டியை கிட்டத்தட்ட 250 கோடி உலகளாவிய மக்கள் பார்த்து மகிழவுள்ளார்கள். இவர்கள் விளையாட்டுப் போட்டிகளை மட்டும் இரசிக்கப்போவதில்லை, அவர்கள் ஐந்து கண்டங்களில் இருந்தும் வந்த பல்வேறுபட்ட அரசியல் போக்குகளை மதநம்பிக்கைளை கொண்ட இளைஞரும், யுவதிகளும் சிட்னி ஒலிம்பிக் நகரில் ஒளிரும் ஒலிம்பிக் தீபத்தின் கீழ் நட்புறவு பரஸ்பரபுரிந்துணர்வு அண்டை அயல் நல்லுறவு ஆகியவற்றின் பால் தமக்குள்ள ஈர்ப்பை ஆர்வத்தை வெளிக்காட்டுவதையும் பார்க்கப் போகின்றார்கள்.

ஒலிம்பிக் விளையாட்டுகளின புகழும் முக்கியத்துவமும் இப் பரந்தஉலகில் வாழ் இளம் மக்களின் சமாதானம், நட்புறவு கருத்துக்கள் முதலிய விசேட அக்கறையும் மீதே தங்கியுள்ளன என்று கூறின் மிகையாகாது.

### ஒலிம்பிக் போட்டியின் நோககங்கள்

உலகப் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் போட்டியின் நோக்கங்கள எவை எனஆராயின்

★ விளையாட்டின் அடிப்படைகளாகவுள்ள உடல், உளதரங்களின் அபிவிருத்தியை மேம்படுத்துதல்.

★ ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்வது, நட்புறவு ஆகிய உணர்வுகளின் வழியே விளையாட்டின் ஊடாகஇளம்சந்ததியினருக்கு புகட்டிமிகச் சிறந்த மிக அமைதியான உலகை கட்டி எழுப்ப உதவுவது.

★ சர்வதேச நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையில் உலக அரங்குகளில்ஒலிம்பிக் போட்டிகளை பரப்புவது.

★ ஒலிம்பிக் விளையாட்டுகளில் உள்ள மெய்யான துடிப்பார்வம் மிக அம்சம் முக்கியமானதே. ஒலிம்பிக்கின் போட்டிகள் உலகின் சகல பாகங்களிலும் உள்ளவீரர்களை மாத்திரமல்ல விளையாட்டு இரசிகர்களையும் காந்தம் போல் இழுக்கிறது.

எனவே அவர்களின் தன்னலம் அற்ற ஆன்மீக வழுப்பாட்டை பெருந்தன்மையை மற்றும் மனிதனுக்குள் ள இதர பலகுணாம்சங்களை வெளிப்படுத்த உறுதுணையாக அமைகிறது.

★ ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுவது என்பது ஒரு வீரனுக்கு அவன் வாழ்நாளில் பெறும் மாபெரும் கௌரவம் ஆகும்.

அத்துடன் விளையாட்டு வீரனுடைய வாழ்க்கையில் உச்சக்கட்டமாக அமையும் ஒலிம்பிக் பதக்கமும் வெற்றிக்கிண்ணமும் அவன் வாழ்விற்கு பெருமையும்நாட்டிற்குசிறப்பையும் தேடித்தரவல்லன.

முன்னால்சர்வதேச விளையாட்டு உடற்பயிற்சி கல்வியின் தலைவரான பேராசிரியர் கலாநிதி நோயல் பார்க்கர். நவீன காலத்துக்கான ஒலிம்பிக் உணர்வின் இயல்பு குறித்து பின்வருமாறு கூறியுள்ளார்.

''ஒலிம்பிக் இயக்கம் ஆயுதப் பரிகாரணத்துக்கும் சமாதானத்துக்குமான போராட்டம். இந்த இரு போக்குகளுக்கும் இடையிலான தொடர்பினை எவருமே உய்த்துணர தவறமாட்டார்கள் என்பது திண்ணம், மனித குலத்தின் சமூக முன்னேற்றத்துக்கான பணியும் ஆதாரங்களும் இவைதான். மக்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வையும் நல் இணக்கத்தையும் மேம்படுத்துவது தான் ஒலிம்பிக் விளையாட்டுக்களது உன்னதபணி ஆகும்''

### ஒலிம்பிக் பாரம்பரியமும் கிரேக்கத்தின் பங்கும்

தற்பயன்கள் பலதரும் ஒலிம்பிக் விளையாட்டுகள் எவ்வாறு ஆரம்பமாகின. இந்த விளையாட்டுக்களது பாரம்பரியத்தின் பொருள் தான் என்ன என்பதை சற்று நோக்குவோம்.

ஒலிம்பிக்கின் சரித்திரம் மிகமிகதொன்மைவாய்ந்தது. இரேக்கமக்கள்பலநூற்றாண்டுகளுக்கு முன்பாக கடவுளின் பிதா என அவர்கள் எண்ணி வழிபட்ட ''யசை''மகிமைப் படுத்தும் முகமாக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜூலை, செப்ரெம்பர்மாதங்களுக்கிடையில் கிறீஸில் உள்ள ஒலிம்பியா என்னும் இடத்தில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்திவந்தனர்.

முதலாவது ஒலிம்பிக்விளையாட்டு கி.மு. 776 ஆண்டு ஆரம்பமானது என்றுவீர இதிகாச தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன்ஒலிம்பியா என்னும் இடத்தில் முதலாவது போட்டி நடைபெற்றதனால் இப்போட்டிக்கு ஒலிம்பிக் என்ற பெயர் சூட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஒலிம்பிக் விளையாட்டுகளின மூலகர்த்தாக்கள் கிரேக்கர் என்பதனால்தான் நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பத்திலும், முடிவிலும் நடைபெறும அணிவகுப்புகளில் கிரேக்கநாட்டு வீரர்களே முன்னிலையில் செல்ல வழி செய்து கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் விளையாட்டு வீரர்களை குறிக்கும் 'அத்திலற்' என்ற சொல்கூட 'அத்லர்ஸ்' என்னும் கிரேக்க சொல்லில் இருந்து உருவானதே. இதன் அர்த்தம் போட்டி என்பதாகும்.

முதலாவது ஒலிம்பிக்விளையாட்டுகள் கிரேக்க விளையாட்டு சதுக்கத்தில் இடம் பெற்றன. இடம் பெற்ற அந்த விளையாட்டு மைதானத்தின் நீளம் 230 யார் அகலம் 30 யார் மாத்திரமே. அங்கு 5 நாட்களுக்கு மாத்திரம் இடம் பெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் 4 விதமான ஓட்டப் போட்டிகள் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து இசைப் போட்டிகள் இடம்பெற்றன, ஈற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த இசைக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்களுடன் சேர்த்து கௌரவிக்கப்பட்டனர்.

புராதன ஒலிம்பிக்கின் ஓர் ஆச்சரியமான செய்தி என்னவென்றால் அந்நாட்களில் சகல விளையாட்டுவீரர்களும் ஆடைகள் ஏதும் இன்றி நிர்வாணமாகவே ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்து கொண்டனர் என்பது தான். இதற்குக் காரணம் பிறந்த மேனியாய் பார்க்கும் பொழுது தான் மனிதன் அழகாக இருக்கிறான் என்று அவர்கள் கருதியமையே ஆகும்.


இதனால்தான் அந் நாட்களில் பெண்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை. 1900 ம் ஆண்டுதான் பரீஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் எத்தனையோ எதிர்ப்புகளுக்கு மத்தியில் முதன் முதலாக பெண்களும் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டது.

### ஒலிம்பிக்கில் வீரர்களின் சாதனை

நவீன ஒலிம்பிக் போட்டிகளில் முதலாவது தங்கப்பதக்கத்தை அமெரிக்க வீரர் 'ஜேம்ஸ் பிரேன்பிடா கொன்னலி, கெந்தி, மிதித்து பாய்தலில் 13.71 m தாண்டி வெற்றி பெற்று தமது நாட்டுக்கு பெருமையை தேடிக் கொடுத்தார். இந்தத்தூரம் தற்போதைய சாதனைகளுடன் ஒப்பிடும் பொழுது சர்வ

[2ஆம் பக்கம் பார்க்க]

★ வெள்ளி நற்சிந்தனை



# சமயப் பாரம்பரியம் பேணும் திருமுறை விழாக்கள்

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**

திருமுறைக்கு விழா எடுப்பதால் திருமுறையைப் பெரிதும் விரும்பும் சிவபெருமான் மகிழ்ச்சியடைவார். இது மட்டுமன்றி திருமுறை விழாவில் பங்கு கொள்பவர் திருமுறை விழாவிற்கு காரணமானவர் அனைவர்க்கும் தமிழ்–சைவப் பண்ணிசை திருமுறைப் பெருமை திருமுறை வாயிலாக சிவபெருமானின் தன்மைகள்-சிவனடியார் பெருமைகள்-சிவனடியார்க்கு சிவபெருமான் அருள் புரியும் முறைகள் முதலிய பல விடயங்கள் தெளிவாகும்.

காஞ்சிப் பெரியவரின் பிறந்த நாளைப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ அவரது அன்பர்கள் முயன்ற போது அதைத் தடுத்து வேதங்களைப் போற்றும் விழா எடுக்கப் பணித்தார் என்பர்.

சென்ற நூற்றாண்டில் திருப்புகழ்ப்பாராயணத்தால் அருள் ஞான வள்ளலாக விளங்கிய திருப்புகழ்ச் சாமி எனக் கொண்டாடப்படும் அருட்திரு சச்சிதானந்த சுவாமிகளின் பிறந்த நாளை அவரின் அன்பர்கள் விமரிசையாகக் கொண்டாட விரும்பிய போது அவர் அந்நாளில் அருணகிரிநாதருக்கு விழா எடுக்கப் பணித்தார் என்பர். இப்படியான அடிப்படைகளில் நோக்கினால்திருமுறை விழாவால் மகிழ்ச்சியடைபவர் பலராக இருப்பர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வணக்கத்திற்குரிய யோகர் சுவாமிகள் போன்றோர் மட்டுமின்றிசேக்கிழார்சுவாமிகள்-பெருமன்னன் இராஜராஜசேகரன் என்று பல தரப்பட்டவர்கள் திருமுறைவிழாவால் மகிழ்ச்சியடைவர்.

நாவலரைத் தொடர்ந்து வாழ்ந்த புலோலி நா. கதிரவேற்பிள்ளை தமது குறைந்த ஆயுட் காலத்தினுள் தமிழ் நாட்டில் பல திருமுறை விழாக்களை நடத்தியதை அறிய முடிகின்றது.

யாழ். கந்தர்மடத்து சுவாமிநாதபண்டிதர் திருமுறைக்குச் செய்த தொண்டு பெரிது. பண்முறையாகப் பதிக்கப்பட்டு வந்ததிருமுறை முதன் முதலில் தனைமுறையாகப் பதிப்பித்து அதில் அரிய பெரிய முன்னுரையாகத் திருமுறைப் பெருமையை வரைந்திருக்கின்றார், காசிவாசிசெந்தி நாதையர் ''தேவாரம் வேதசாரம்'' என்ற நூலை உதவியதன் மூலம் தன்னைப் பெருமைப் படுத்தியதோடு அதனைப் படிப்பவர்களையும் பெருமையடையச்செய்திருக்கின்றார்.

சேக்கிழாருக்கு முன் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி முதல் இக்காலத்தில் வாழ்கின்ற அ. ச. ஞானசம்பந்தன்ஏழாலைபண்டிதமணி மு. கந்தையா போன்ற அறிஞர்கள் திருமுறைப்பெருமையால் ஈர்க்கப்பட்டு பெருமையடைந்திருக்கின்றார்கள். இப்படியானவர்களால் எவ்வளவு தான் புகழப்பட்டாலும் இன்னும் பல லட்சக்கணக்கானவர்களால் புகழ்ந்து கொண்டாட வேண்டிய அருமை பெருமைகளுடனேயே திருமுறைகள் விளங்குகின்றன.

சங்க காலத்தின் பின் தமிழர் கேண்மையுற்றகாலம் சோழர் காலமே என்றும், சோழர் காலத்தில் திருமுறைகள் போற்றப்பட்டமை அதற்கு அடிப்படை என்றும் ஒரு பெரியார் வாயூறுவார்.

எனவே நாம் காலம் மேன்மையுறதிருமுறைகள் உதவும். திருமுறைகளை அறிந்து பேணிக் கொண்டாடிப் பெருமையடைவதற்குப் பொறுப்பாளிகள் நாமே. நாம் இக்கடமையில் காலடி எடுத்து வைக்க இதுபோன்ற பெருவிழாக்கள் உதவும்.

யாழ்ப்பாணம்

தேர்தல் ஆணையாளருக்கு எதிராக

# அரசு நடவடிக்கை எடுத்தால் நாடுதழுவிய போராட்டம் நடக்கும்

## ஐ.தே.கட்சி, ஜே.வி.பி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். இவருக்கு எதிராக அரசு நடவடிகக்கை மேற்கொள்ளுமாயின் நாடுதழுவிய போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் அறிவித்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் தொடர்பான பத்திரிகையாளர் மகா நாடொன்றையும் ஜே.வி.பி நடத்தியுள்ளது.

அந்த மாநாட்டில் நீதியாகவும், நேர்மையாகவும் தேர்தலை நடத்த நடவடிக்கையெடுக்கும். தேர்தல் ஆணையாளர் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் உள்ளூர் ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் போராட்டம் நடத்தத் தயங்க மாட்டோம் என்று அந்தமாநாட்டில் தெரிவித்துவுளனர். (வ)

# ஜே.வி.பியின் உறுப்பினர் பொ.ஐ.ஐ.முன்னணியில் இணைந்தார்

(கொழும்பு)

ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் அக்கட்சியிலிருந்து விலகி பொது ஜன ஐக்கிய முன்னணியில்சேர்ந்து கொண்டார்.

அஜித்குமார என்பவரே ஜே.வி.பியிலிருந்து விலகியவராவார்.

1989ஆம் ஆண்டு ஜே ஆரின் ஆட்சிக்காலத்தின் போது பாராளுமன்றத்தின் மீது குண்டு வீசி லலித் அத்துலத் முதலி காயமடைவதற்குக் காரணமாக இருந்தவர்இந்த அஜித்குமார என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## சுக்கிரவார உற்சவம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயததில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சுக்கிரவார உற்சவம் நடைபெறவுள்ளது. [செ-106]

# சமாதானம் ஏற்படும் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை

## செய்தியாளர் மாநாட்டில் அனுரா

அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்தும் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்த அனுரா மேலும் கருத்துத்தெரிவிக்கையில் அரசாங்கம் கடந்த ஆறு வருடங்களில் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை தொடரும் யுத்த நடவடிக்கை உயிரிழப்புக்களையும் தோல்விகளையுமே சந்தித்துள்ளது.

திட்டமில்லாத யுத்த நடவடிக்கை அதிகரித்த உயிரிழப்புகளையும் பொருளாதார வீழ்ச்சியையுமே ஏற்படுத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டார். [ந-2]

### அவசரகால...

பதி தனது விசேட அதிகாரத்தின் கீழ் கூட்டி அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையைபாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

சபாநாயகர் கே.பி இரத்தினாயக்க தலைமையில் மூன்று மணித்தியாலம் நடைபெற்ற இக்கூட்டத்தில்,

மசோதாவுக்கு ஆதரவாக 101 வாக்குகளும், எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டது, ஆதரவாக பொது ஜன ஐக்கிய முன்னணி ஈ.பி.டி.பி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஆகிய கட்சிகளும் எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஜே.வி.பி ஆகிய கட்சிகளும் வாக்களித்தன.

இவ்வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக்கட்சி கலந்து கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### விடுதலை...

பட்ட அன்ரன்அமிர்தநாயகம் (வயது34)என்பவர் தற்போது யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந)

## ஆரோக்கிய அன்னை திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் கஸ்தூரியார் வீதி அஞ்ஞணந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழாத் திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30மணிக்கு யாழ் ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும், ஆசீர்வாதமும் இடம் பெறும். (ந)

### புலிகள்...

மாறு:—

வீரவேங்கைகளான

- தமிழ்/மதி (இராசையா யோகராணி) கிளிநொச்சி
- தமிழரசி/இயலினி (இராஜகோபால் உஷாந்தினி) மல்லாவி
- சுடர் [நடேசபிள்ளை சுலக்ஷனா] யாழ்ப்பாணம்
- இளநிலா (சண்முகராஜா காயத்திரி தேவி) யாழ்ப்பாணம்
- மேஜர் கண்ணகி (நடேசராஜா கோகுலராணி) யாழ்ப்பாணம்
- முடிஅழகு/ஆனந்தி (ஆனந்தலிங்கம் விஜிதா) யாழ்ப்பாணம்
- நவனந்தினி (சிவஞானசுந்தரம் தஸ்மினி) மணலாறு
- கடற்செல்வி (நடேசமூர்த்தி கவிதா) யாழ்ப்பாணம்
- கப்டன் சிவலோஜன்/அலெக்ஸ் (தவராசா இராசரத்தினம்) மட்டக்களப்பு
- மேஜர் செல்வமலர் (நடராஜா உமா) யாழ்ப்பாணம்
- குயில் [தனபாலசிங்கம் கவன்னா] முள்ளைத்தீவு

(ந-2)

### இந்தியத்...

கைக்கான இந்திய தூதுவர் திருஸ் ணூ மேனன்காந்தி அழைத்து தேர்தல் நிலவரம் தொடர்பாக அவர்களிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின்போது வடக்குக் கிழக்கு மாகாணத்தின் தேர்தல் நிலவரம் தொடர்பாகவும், யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து வாழும் அகதிகள் நிலவரம் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இந்தியத் தூதுவரின் இச் சந்திப்பு புதுடில்லியின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தூதுவர் விரைவில் ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்களையும் சந்தித்து நிலைமைகளை கேட்டறியவுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வ]

### 3 இராணுவத்...

…வர்களில் களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து எஸ். அன்பரசன், எஸ்.கிருஷ்ணகுமார், எஸ். சிவலிங்கம ஜே. யெராஜ், வி.ராசகுமார் எம். ரூபநேசன் ஆகியோரும் வெலிககடைச் சிறையிலிருந்து எஸ்,எம் எஸ். பெர்னாண்டோ, ஜ. எஸ். ஞானகிறி, அஜித்பிரசாந்தகுமார, ஆகியோருமே யாழ் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்கள் ஆவர். (வ-12)

### 17ந் திகதி...

வதற்காக 800 பயணிகளுக்கு இன்றும் நாளையும் பயணச் சீட்டு வழங்கப்படும்.

இன்று பிற்பகல் 12-00 மணிக்கும் 5-00 மணிக்கும் இடையில் 300 பயணிகளுக்கும், நாளை சனிக்கிழமை 500 பயணிகளுக்கும் பயணச்சீட்டு வழங்கப்படவுள்ளதாகவும், இதில் 100 பல்கலைக்கழக மாணவர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ''சிற்றி ஒவ் திங்கோ'' பயணிகள் கப்பலுக்கு பயணச் சீட்டு 18ம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளதாகவும், 19ம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பல் சேவை நடைபெறும் எனவும் சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு செல்ல பயணிகளிடம் 35-00 ரூபா அறவிடப்படுவதனால் சில்லறைக்காசுடன் வருமாறும் சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது. (வ)

### வாக்குச்...

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இம்மாதம் 19 ஆம் திகதி முதல் தபாலகங்கள் மூலம் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### பகிரங்க...

இச்சவாலை ஏற்று பகிரங்க விவாதத்துக்கு ரணில் விக்கிரமசிங்கா வரத்தயங்கினால் அவரும் அவருடைய கட்சித் தலைவர்களும் என்னைப் பற்றி அவதூறாகப் பிரச்சாரம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தலில் குறுகிய அரசியல் இலாபம் ஈட்டும் நோக்கிக் தகாத குற்றச்சாட்டுக்களை ஐக்கிய தேசியக்கட்சி என் மீது சுமத்தி வருகின்றது. இதனை அக்கட்சித் தலைவரும் ஏனையவர்களும் நிறுத்த வேண்டும் என வரதராஜப் பெருமாள் தமது அறிக்கையில் கேட்டுள்ளார்.

இதேவேளை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதிக்கு விசுவாசமாகவும், நேர்மையாகவும் ஒத்துழைப்பை வழங்குமாறும் மக்கள் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த உதவுமாறும் ரணில் விக்கிரமசிங்காவை வரதராஜப்பெருமாள் கேட்டுள்ளார். (ந-2)

### அனுருத்......

அவதானிகள் கருதுகின்றனர்.

படையினரின் பலோபலத்தை அதிகரிக்கும வகையில் நவீனரக யுத்த தளபாடங்கள் யுத்தகளத்தில் பயன்படுத்தப்படும் நடவடிக்கைகளை அவதானிக்கும் பொருட்டும் இவ் விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவீன யுத்தக் கப்பலை வழங்கிய இந்தியாவிடம் இருந்து மேலும் நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் செய்திகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் அவரது பரிவாரங்களும் யுத்தமுனைப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள இராணுவத்தினருடனும் உரையாடியதாகவும செய்திகள மேலும் தெரிவிக்கின்றன.

யுத்தம் தீவிரமடைந்து வரும் வேளையில் தமிழ் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைப் பொதுமக்களிடம் கேட்டறிந்துகொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு!

சேவை இடைநிறுத்தம் தொடர்பாக பதிவு மேற்கொண்டவர்கள் மட்டும் 16-09-2000 சனிக்கிழமை காலை 9 மணிக்கு D. M. I. கல்வி நிலையத்திற்கு சமுகம்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்

(1732)

வீணையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

வீணையை மீட்டிட மக்களே எழுக !
விடியலை மீட்கும் பலத்தை மக்களே தருக!
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கே!



(ஈ. பி. டி. பி)

(இ/736)

ஈ. பி. டி. பி. எடுத்த முயற்சியை அடுத்து குடாநாட்டில் மின்சாரப் புனரமைப்புக்கு 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இதில் 45 கோடி ரூபாவுக்குரிய வேலைத்திட்டங்கள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச் கோ ஸ்தாபனத்தாரால் இல 15, வென்னாந்தெரு, யாழ்ப்பாணம் ...ஆம் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.